அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 46/90

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்– கொழும்பு. 7
1990, ஒக்டோபர் மாதம் 30 ஆந் திகதி

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாணச் சபைகளின் தலைமைச் செயலாளர்களுக்கும்,
ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்களுக்கும்,
அரசாங்க கூட்டுத்தாபனங்கள்/அரசுக்குரித்தான கம்பனிகள்/
அரசுக்குரித்தான வர்த்தக நிறுவனங்கள் என்பவற்றின் தலைவர்களுக்கும்/
பொறுப்பதிகாரிகளுக்கும்.

ஆட்சேர்ப்பு முறைகளுள் உள்ளடக்கப்பட வேண்டிய
மற்றைய கல்வித் தகைமைகள்

கீழ் காட்டப்படும் கல்வித் தகைமைகளை குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு முறைகளில் காட்டப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுக்கு மாற்றுக் கல்வித் தகைமைகளாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

..6
4

| புதிய கல்வித் தகைமைகள் | அத்தகைமைகளுக்கு சமப்படுத்தக் கூடிய மற்றைய கல்வித் தகைமைகள் | மேலதிக விபரங்களின் பொருட்டு தொடர்பு கொள்ளல். |
|---|---|---|
| 1. தேசிய பயிலுனர் சபையினால் நடாத்தப்படும் மேசன், தச்சு, மின்கம்பிகளை இழுத்தல், தண்ணீர் குழாய் பொருத்துதல் உருக்கு கம்பிகளை பொருத்துதல் மற்றும் கம்பிகளை வளைத்தல், மோட்டார் வாகன தொழில்நுட்பம் போன்ற துறைகளில் தேசிய தொழிற் பரீட்சையில் 11 வது தரத்திலான சித்தி. | உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் தொழில் நுட்பக் கல்லூரியினால் குறிப்பிட்டத் துறையில் வழங்கப்பட்ட தேசிய தொழில் சான்றிதழ். | உயர் கல்வி அமைச்சு குறிப்பு இல. கா.அ/5/14/7 |
| 2. உயர் தேசிய டிப்ளோமா பொறியியல் (உ. தே. டி. பொ.) | தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா (தே. தொ. நு. டிப்) | கல்வி உயர்கல்வி அமை (தொழில்நுட்ப கல்விப் பிரிவு) குறிப்பு இல. டி. எஸ்/13/72 (12) |
| 3. இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய நாலாண்டு கணக்கியல் டிப்ளோமா (இறுதி) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட வர்த்தக மாணிப்பட்டம் (சாதாரண சித்தி) | கல்வி உயர் கல்வி அமைச்சு (தொழில் நுட்ப கல்விப் பிரிவு) குறிப்பு இல கா.அ/5/14/7 |
| 4. இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் உயர்தேசிய நாலாண்டு கணக்கியல் டிப்ளோமா நெறியின் 2வது வருட சான்றிதழ் (குறிப்பிட்ட பதவிக்கான ஆட்சேர்ப்பு முறையில் கல்வித்தகைமைகளாக வர்த்தகவியல் தொடர்பான அறிவு தேவையென கேட்கப்படுமிடத்து மாத்திரம்) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட முதலாவது அல்லது மத்திய சான்றிதழ். | உயர்கல்வி அமைச்சு, குறிப்பு இல. கா. அ/5/14/7 |
| 5. இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் நாலாண்டு உயர் தேசிய வர்த்தகவியல் சான்றிதழ் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்பட்ட வர்த்தக மாணிப்பட்டம் (சாதாரண சித்தி) | உயர் கல்வி அமைச்சு, குறிப்பு இல. கா. அ/5/14/7 |
| 6. இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் நான்கு உயர் தேசிய வர்த்தகவியல் டிப்ளோமா பாடநெறியின் இரண்டாம் வருட சான்றிதழ். (பதவியின் பொருட்டு கல்வித் தகைமைகளாக வர்த்தகவியல் அறிவு தேவையென ஆட்சேர்ப்பு முறையில் கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம்) | அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப கல்லூரியில் இருந்து பெற்றுக்கொண்ட முதலாவது அல்லது இடைதர சான்றிதழ் | உயர் கல்வி அமைச்சு குறிப்பு இல. கா. அ/5/14/7 |

..6

| | | |
|---|---|---|
| 7. குறிப்பிட்ட பாடத்துடன் எம்.பில் அல்லது எம்.எஸ்.சி. பட்டத்துடன் கூடிய ராச்சியத்தில் உயர்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் பட்டம். | இலங்கை பல்கலைக் கழகத்தினால் குறிப்பிட்ட துறையில் வழங்கப்படும் 02ஆம் வகுப்பின் சிறப்புப் பட்டம் | உயர் கல்வி அமைச்சு குறிப்பு இல. உஅ/4/6 13(11) பல்கலைக்கழக மானியக் குழு குறிப்பு யுஜிசி/எஸ் சி/3/4 |
| 8. தேசிய கல்வி நிறுவனத்தினால் வழங்கப்படும் விருத்தி செய்யப்பட்ட கல்வித் தொடர்பான பட்டதாரிப் படிப்புப் பட்டம். | தூரத்து கல்வி முறையின் கீழ் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் கல்வி டிப்ளோமா | கல்வி உயர் கல்வி அமைச்சு, குறிப்பு இல. 4/குகுஅ/சா.பி/17 |
| 9. பரீட்சை ஆணையாளரால் வழங்கப்படும் தேசிய தொழில் நுட்ப சான்றிதழுடன் குறிப்பிட்டத்துறையில் (தே.தொ.சா) 5 வருட செய்முறை அனுபவம் (அரசாங்க கூட்டுத்தாபன துறைகளில் அல்லது தனியார் துறைகளில்). | தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (தே.தொ.கா) அல்லது உயர் தேசிய டிப்ளோமா பொறியியல் | கல்வி உயர் கல்வி அமைச்சு (தொழில் நுட்பக் கல்விப் பிரிவு) குறிப்பு இல. டிஈ/என் 13/72 (12) |

குறிப்பு

இவ்வாறு போதிக்கும் நியமனங்களுக்கு அன்றி வேறு எந்த நியமனங்களுக்கும் பொருந்தாது. ஆட்சேர்க்கும் போது கல்வித் தகைமைகளாக தேசிய தொழில் டிப்ளோமா சான்றிதழும் ஏற்றுக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே இது செல்லுபடியாகும் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

02. குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு முறைகளை பரிசீலனை செய்து பொருத்தமாயின் மாத்திரம் இப்புதிய கல்வித் தகைமைகளையும் அதில் உள்ளடக்கிக் கொள்ளவும்.

ஒப்பம்: ஆர். அபேரட்ன.
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.